# உங்கள் குழந்தைகளுக்கு கேட்டல் பேசுதல் வாசித்தல் எழுதுதல் திறனிற்கு உதவி செய்யுங்கள




சிறுவர்கள் தமது ஆரம்பவகுப்புக்களில் கதைகள் எதுகைத்தொடை வரிகள் என்பவற்றை வாசிப்பதன் மூலம் விரும்பிக் கற்கிறார்கள். கீறுவதனாலும் படங்கள் வரைவதனாலும் சிறுவர்கள் எழுத்துப் பயிற்சியை தொடங்குகிறார்கள். கீழே உள்ள பயிற்சிகள் இத் திறன்களை கூட்டுவதற்கு உதவி செய்யும்.

உங்களிற்கும் உங்கள் சிறார்களிற்கும் ஏற்றவாறு பயிற்சிகளை கீழேயிருந்து தெரிவு செய்யவும். உங்களிற்கு மிகவும் தெரிந்த மொழியில் இப் பயிற்சியினை செய்வது பொருத்தமாக இருக்கும் என்பதனை ஞாபகத்தில் வைத்திருக்கவும். தங்களிற்கு தாய்மொழியும் நோர்வேயிய மொழியும் தெரிந்திருந்தால் இரண்டு மொழிகளிலும் இப் பயிற்சிகளை செய்யலாம். இந்த இணைய இணைப்பில் இவற்றைப் பார்க்கலாம். www.morsmal.no






1. பாடல்கள் கதை எதுகைத் தொடை வரிகள் என்பவற்றை உங்கள் தாய்மொழியில் தங்களுடைய பிள்ளைகளுடன் இணைந்து பிரிக்கவும். அதே போல் நோர்வேயிய மொழியிலும் பிரிக்கவும்.

2. பெட்டிகள் வீட்டில் பாவித்த பொருட்கள் என்பவற்றை சிறுவர்களிடம் கொடுத்து அவர்கள் விரும்பியவாறு ஏதாவது செய்து விளையாட விடவும். அத்துடன் அவர்கள் செய்த பொருட்கள் என்னவென கேட்கவும்.

3. பாவித்த உடைகள் அனைத்தையும் ஒரு பெட்டியுள் போட்டு சிறுவர்களிடம் கொடுக்கவும். அவர்கள் இவ் உடைகளைப் போட்டு வினோதமான விளையாட்டுக்கள் விளையாட உதவும். பிள்ளைகளிடம் என்ன ஆலோசனை செய்கின்றார்கள் எனக் கேட்கவும்ää மேலும் பல கேள்விகளைக் கேட்டு பிள்ளைகளை சிந்திக்க வைக்கவும்.

4. பிள்ளைகள் கூறும் கதைகள் எல்லாவற்றையும் ஒரு தாளில் எழுதவும். எழுதியவற்றை பிள்ளைகளிடம் கொடுத்து வாசிக்கவும்.

5. சுற்றுச்சூழலில் இருக்கும் பொருட்களான பாற்பெட்டிகள் சிற்றுந்தின் பெயர்கள் விளம்பரப்பலகைகளில் இருக்கம் எழுத்துக்களையும் சொற்களையும் வாசிக்க விடவும்.

6. உணவு தயாரிக்கும் செய்முறைகளை பிள்ளைகளுடன் சேர்ந்து வாசித்துää கதைத்து உணவை தயாரிக்கவும்.

7. பிள்ளைகளையும் சேர்ந்து விளையாட்டுப் பொருட்களை அடுக்கவும். அடுக்கும் போதும் தனித்தனியாக பிரித்து அடுக்கும் போதும் அவர்களிடம் எவ்கையான பிரிவுகளிற்குள் இந்த விளையாட்டுப் பொருட்கள் சேர்க்கலாம் எனக் கேட்கவும்.

8. இணையத்தின்; குப்பைக்கூடைக்குள் கழிக்கும் கடிதங்களை வாசித்து எது நல்ல செய்தி எது கெட்ட செய்தி எனப் பிரித்து விளக்கவும்.

9. வீட்டில் பிள்ளைகளிற்கு இருந்து வாசிக்க எழுதää படங்கள் வரைய என ஓர் இடத்தை ஒதுக்கவும்.

10. பிள்ளைகளிடம் குடும்பப் படங்களைக் காட்டிக் கதைகளைக் கூறவும்.

# கதைகள் கூறல்

கதைகள் கூறுவதனால் பிள்ளைகளின் கற்பனை வளர்ச்சி மொழி வளர்ச்சி கேட்டல் திறன் என்பவை தூண்டப்படுகிறது. நீங்கள் பிள்ளைகளிற்கு கதைகளைக் கூறலாம் அல்லது அவர்களிடம் கதைகளைக் கேட்கலாம். கதை கேட்டல் என்பதற்கு உதாரணமாக:

12. புத்தகத்திலிருந்து ஒரு நபரைப்பற்றி அல்லது தொலைக்காட்சி நிகழ்வுபற்றி கேட்கலாம்.

13. வேறு ஒரு தெரிந்த நபரைப்பற்றி கேட்கலாம்.

14. பிள்ளைக்கு மிகவும் பிடித்த விளையாட்டைப்பற்றி கேட்கலாம்.

கதைகள் எவ்வாறு கூறலாம் என்பதற்கு இங்கே சில சிறந்த குறிப்புக்கள்.

15. மிகவும் விறுவிறுப்பாகவும் குரலை மாற்றி மாற்றி கதைப்பதாகவும்ääசிறு பொம்மைகளை பாவித்தும் சரீர மொழியாலும் கூறலாம்.

16. பிள்ளைகளிற்கு எது பிடிக்கின்றதோ அதிலிருந்து தொடங்கவும்.

17. கதை எதைப் பற்றிää எங்கே எப்பொழுது நடைபெற்றது எனக்கூறவும்.







# சேர்ந்து வாசித்தல்

நாம் வாசிக்கும் போது கருத்தினையும் வாசிக்கும் முறைமையையும் கவனிக்க வேண்டும். சிறுவர்களிற்கு வாசிப்பது என்பது மிகவும் அர்த்தமுள்ள செயலாகும். இங்கே வாசிக்கும் முறை பற்றிய சில குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன.

18. பிள்ளைகளை தாம் விரும்பியவற்றை தெரிவு செய்ய விடவும். உதாரணமாக புத்தகம் சிற்றிதழ்கள் பத்திரிகை கோப்புகள் ஒலிவட்டு காணொலிவட்டுக்கள். பன்மொழிக்கதைகளை கேட்பதற்கு றறற.அழசளஅயட.ழெ என்ற இணைப்பினைப் பார்க்கலாம்.

19. புத்தகத்திலிருக்கும் படத்தை சிறுவர்களிற்கு காட்டி அதனைப் பற்றிய சம்பாசணை செய்யவும்.

20. படப்புத்தகங்களை வாசிப்பதால் சிறுவர்களின் கற்பனை வளம் சிந்தனைத்திறன் சொல்லாட்சித்திறன் பெருகுகின்றது. படங்களின் பெயர்களைக் கூறவும்.

21. சிறுவர்கள் விரும்பிய புத்தகங்களை மீண்டும் மீண்டும் வாசிக்கவும்.

22. சிறு எதுகைத்தொடை வரிகள் அடுக்குமொழிகள் என்பவற்றையும் மீண்டும் மீண்டும் வாசிக்கவும்.

23. பிள்ளைகளை தாம் விரும்பியவாறு புத்தகத்தைப் படங்களுடன் தயாரிக்கம் படி ஊக்குவிக்கவும். அவ்வாறு தயாரித்த புத்தகத்தை தங்களிற்கு வாசித்துக் காட்டும்படி கூறவும்.



# பிள்ளைகளை வாசிக்கத் தூண்டல்



பிள்ளைகள் புத்தகத்திலிருக்கும் கருத்தினை தெளிவாக புரிந்து கொண்ட பின்னர் தாமாக விரும்பி வாசிக்க விட வேண்டும். அவர்கள் உங்களிற்கு வாசிக்கும் போது தேவையான நேரத்தை வழங்க வேண்டும். வாசிக்கும் விடயத்திலிருந்து இடையிடையே சில கேள்விகளைக் கேட்டு அவர்களிற்கு கருத்து விளங்கியுள்ளதா எனப் பாருங்கள். நோர்வேயிய மொழியில் வாசித்தாலும் தாய்மொழியில் கருத்தினைப் பரிமாறவும். கடினமானää நீளமான சொற்களை வாசிக்கும் போது தேவையான நேரம் கொடுக்கவும். இவ்வாறான கேள்விகளைக் கேட்கவும்.

24. படத்தைப் பார்க்கவும். எந்த எழுத்தில் இந்தப்படத்தின் பெயர் தொடங்குகிறது?


25. படத்தைப் பார்க்கவும். இந்தப் படத்திற்கு எந்தச் சொல் பொருந்துகிறது?

26. இந்தச் சொல் எந்த எழுத்தில் தொடங்குகிறது? எந்த ஒலியில் இந்தச் சொல் தொடங்குகிறது? எந்த எழுத்தில் இந்தச் சொல் முடியும்?

நீங்கள் ஒவ்வொரு நாளும் பல்வேறு தேவைகளிற்காக வெளN;வறான குறிப்புக்களை வாசிக்கின்றீர்கள் என்பதை விளக்குவது முக்கியமானதாகும். உதாரணமாக உணவுச் செய்முறைப் பட்டியல் வாழ்த்துமடல்ää நாள்காட்டி பொருட்பட்டியல் அறிவுறுப்பதல் பட்டியல்ää வரைபடம் பத்திரிகை மின்னஞ்சல் அடையாளச்சின்னங்கள் இணையத்தளங்கள் புத்தகங்கள்.

# சேர்ந்து வாசித்தல்









புத்தகத்தை வாசிக்கும் போது அப் புத்தகத்தைப் பற்றி முதலில் கலந்துரையாட வேண்டும் என்பதை மிகக் கவனத்தில் கொள்ள வேண்டும். வாசிக்கும் புத்தகத்தைப் பற்றி வாசிப்பிற்கு முன்பும்ää வாசிக்கும் போதும் வாசித்த பின்பும் கலந்துரையாட வேண்டியது மிக முக்கியமாகும். அத்துடன் பிள்ளைகளுடைய சிந்தனைகளையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ளுங்கள். புத்தகத்தை சிறிது வாசித்த பின்பும் வாசித்து முடித்த பின்னரும் வினாக்களை கேளுங்கள்.

புத்தகத்தை வாசிக்கும் முன்பும் வாசிக்கும் போதும் வாசித்த பின்பும் கேட்க வேண்டிய சில வினாக்கள் இங்கே உள்ளது.

27. எதைப்பற்றி வாசிக்க விரும்புகின்றீர்?

28. உமக்குத் தெரிந்த புத்தகத்தை தெரிவு செய்ய விரும்புகின்றீரா?




29. புத்தகத்தின் முன் பக்கத்தைப் பார்க்கவும். இது என்ன உள்ளடக்கத்தை கொண்டுள்ளது என நினைக்கின்றீர்?

30. படத்தில் என்ன தெளிவாகின்றது?

31. கடினமான சொற்களிற்கு என்ன கருத்து என எவ்வாறு கண்டறியலாம்?

32. இந்தக் கதையில் தொடர்ந்து என்ன நடக்கப் போகின்றது எனக் கூறமுடியுமா?

33. உமக்கு மிகப் பிடித்தமான பகுதி யாது?

34. இக் கதையில் உமக்கு மிகப் பிடித்தவர் யார்? பிடித்ததற்கான காரணம் யாது?

35. இதன் முடிவு வேறு மாதிரி அமைய வேண்டுமென நினைத்தால் எவ்வாறு அமையவேண்டும் என நினைக்கின்றீர்?

# வாசிப்பதற்கான ஆலோசனைகள்

36. டீடைனநவநஅய என்ற இணைப்பில் இந்த முகவரியில் அழுத்திப் பாருங்கள் http://morsmal.no/bildetema-norsk இதில் உமது தாய்மொழியை தெரிவுசெய்த பின்பு ஒரு விடயத்தை தேர்வு செய்யுங்கள். உதாரணாக சமயலறைப்பொருட்கள். அங்கே இருக்கும் படத்தை அமத்தும் போது உமது தாய்மொழியிலும்ää நொஸ்க்கிலும் கேட்கவும் வாசிக்கவும் முடியும்.

37. பிள்ளைகள் தாம் அனுபவித்த ஏதாவது ஒன்றைப்பற்றி கூறும்படி ஊக்குவிக்கவும். அவர்கள் கூறுவதை ஒரு தாளில் எழுதவும். பின்பு அதனை அவர்களுடன் இணைந்து வாசிக்கவும்.

38. அருகிலிருக்கும் புத்தகசாலை அல்லது பாடசாலை புத்தகசாலையில் புத்தகம் ஒன்றை கடன் வாங்கி சேர்ந்து வாசிக்கவும்.

39. உமது தாய்நாட்டைப்பற்றிய தகவலை றுமைipநனயை: றறற.றமைipநனயை.ழசப இணையத்தளத்தில் சேகரிக்கவும். அதனை பிள்ளைகளிற்கு கூறவும்.

40. இணையத்தளத்தில் இருக்கும் படத்தின் கருத்தினை கீறவும் அல்லது வா்ணம் ப10சவும்.

41. சொற்களின் கருத்துக்களை அகராதியின் உதவியுடன் அறியவும்.

42. ஒரு சிறு கதைப்புத்தகத்தில் எழுத்தாளரினதும்ää விளக்குநர்களினதும் பணி எவ்வகையானது எனக் கூறவும்.

43. கதைப்புத்தகத்தின் மையக்கருத்தினையும் முதல்பக்கம் கடைசிப்பக்கம் உள்ளடக்கப்பட்டியல் / விபரப்பட்டியல் அல்லது தலைப்பு என்பவற்றைப் பற்றிக் கலந்துரையாடவும்.



பிள்ளைகள் கற்பதற்கு வீட்டில் உதவி செய்யவும

# வாசிப்பும் எழுத்தும் ஒன்றுடன் ஒன்று கை கோத்திருக்கின்றது

எழுத்துப்பயிற்சியானது கிறுக்கல் வரைதல் போன்றவற்றின் மூலம் தொடங்குகிறது. இவை ஓர் முக்கியமான ஆரம்பப்பயிற்சியாகும். இவற்றை நாம் ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் எழுதியதை உரத்து வாசிக்கும் படி கூறவும். இவற்றை ஓர் இடத்தில் அல்லது கணனியில் கோப்புறை ஒன்றில் சேமித்து வைத்து அவர்களிற்குக் காட்டவும்.

பேசுதல் வாசித்தல் எழுதுதல் என்பவற்றிற்கான தொடர்பினை பிள்ளைகளின் அனுபவத்திலிருந்து தொடர்புபடுத்திக் காட்டவும். இங்கே சில ஆலோசனைகளைப் பார்க்கவும்.

44. பிள்ளைகள் அனுபவத்தினையும் விருப்பத்தினையும் கேட்டு உரையாடவும்.

45. உரையாடலிலிருந்து எதனை எழத விரும்புவதாக குழந்தையிடம் கேட்கவும்.

46. பிள்ளைகள் கூறும் சிந்தனைகள் அனைவற்றையும் ஒரு தாளில் எழுதவும். குழந்தைகள் உரையாடும் முறையிலேயே எழுதவும்.

47. நீங்கள் எழுதியவற்றை பிள்ளைகளை வாசிக்கும்படி கூறவும்.

48. பிள்ளைகள் தாம் வாசித்ததை படமாக வரையும்படி தூண்டவும்.



# ஒவ்வொரு நாளும் எழுதிப்பழகுவது நன்று



வீட்டில் ஒவ்வொரு நாளும் வாசிக்கும் பழக்கத்தைப் போலவே எழுதும் பழக்கத்தையும் வழக்கமாகக் கொண்டிருத்தல் மிகவும் நன்று. நீங்கள் வெள;வேறு தேவைகளிற்காக எழுதுவதை பிள்ளைகளிற்கு காட்டுங்கள். உதாரணமாக உணவுப்பொருள் பட்டியல் பிறந்தநாள் வாழ்த்து மடல். நீங்கள் இவற்றை கையாலும் கணனியிலும் / இணையப்பதிவுகளிலும் எழுதலாம். எழுதுவதற்கான பயிற்சியை மேற்கொள்வதற்கு இங்கே சில ஆலோசனைகள் தரப்பட்டுள்ளது.

49. உணவுப்பொருள் பட்டியலிட்டு எழுதவும். அப் பொருட்களை வாங்கிய பி;ன் கோடிட்டு வெட்டவும்.

50. சமயலறைச்சுவரில் செய்திப்பலகை ஒன்றைக் கொழுவவும். அதில் குடும்பத்திலுள்ள அனைவரும் ஒருவருக்கொருவர் குறுஞ் செய்திகளை எழுதிப் பரிமாறவும்.

51. பிள்ளைகளிடம் தமக்குத் தேவையான சிறு குறிப்புக்களை எழுதுவதற்கு ஒரு கட்டாக நினைவ10ட்டல்துண்டுகளைக் கொடுக்கவும்.

52. ஒரு கிழமைக்குத் தேவையான உணவுப் பட்டியலை திட்டமிட்டு பிள்ளைகளுடன் இணைந்து எழுதவும்.

53. உங்கள் குடும்பப் புகைப்படக் கோப்பிலிருக்கும் படங்களிற்கு பிள்ளைகளுடன் இணைந்து சிறு குறிப்புக்கள் எழுதவும்.

54. பிள்ளைகள் தயாரித்த வரைபடங்கள்ää ஏனைய பொருட்கள் போன்றவற்றிற்கு சிறு குறிப்பு எழுதவும்.

55. பிள்ளைகளுடன் இணைந்து காந்தவியல் எழுத்துக்களால் சொற்களை குளிர்சாதனப் பெட்டியில் உருவாக்கவும்.

56. வாழ்த்துமடல் வரவேற்புமடல்ääநன்றிமடல் என்பவற்றை பிள்ளைகளுடன் இணைந்து எழுதவும்.

57. குடும்பநாட்காட்டி ஒன்றினை தாளிலோ அல்லது கணனியிலோ தயாரிக்கவும். அதில் குடும்ப நிகழ்வுகளை எழுதவும். அண்மையில் நடைபெறும் நிகழ்வுகள் பற்றியும்ää எதிர்காலத்தில் நடைபெறும் நிகழ்வுகள் பற்றியும் கலந்துரையாடவும். அத்துடன் இந் நிகழ்வின் சிறப்புப்பற்றியும் எங்கேääஎப்பொழுதுääஏன்; நடைபெறுகின்றது எனவும் இதில் யார் யார் பங்குபெற்றுகின்றார்கள் எனவும் கூறவும்.